'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்


(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XVI ஜனவரி கி.பி. 2025 சான்று : 181



## யூபிலி ஆண்டே வருக!
## எதிர்நோக்கினைத் தருக!!




## கிறிஸ்மஸ் விழாக்கள்













## வட்டாரத் தியானக் கூட்டங்கள்












பாசத்திற்குரிய நற்செய்திப் பணி குடும்பமே.

இதோ உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் (மத் 28:20) என்று நிகழ்கால (ணேஷௌவிளஜமி) வார்த்தையை கூறிய இயேசு கிறிஸ்து ஆண்டவரின் ஆசி உங்களிலும் என்னிலும் இந்த கிபி 2025 ஆண்டு முழுவதும் ஏன் நம் வாழ்நாளெல்லாம் தங்கி. தம் ஆசிகளால் நிரப்பச் செபிக்கிறேன். வாழ்த்துகிறேன். உங்கள் அனைவருக்கும் கிபி 2025 ஆம் ஆண்டின் புத்தாண்டு வாழ்த்துக்களை நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு சகோதரர் என்னிடம் நேரில் ஒருமுறையும் கடித வாயிலாக பலமுறையும் இந்த கிபி என்ற கருத்துருவை தெரியப்படுத்திக் கொண்டே இருக்கிறார். அவர் சென்ற முறை எழுதிய கடிதத்தில் அவர் எழுதியிருந்த கருத்துருவை இங்கே தருகிறேன்.

ஆங்கில புத்தாண்டு அல்ல! ஆண்டவரின் புத்தாண்டே!

1. எசாயா முன்னறிவித்ததை- ஆண்டவரே முழக்கமிட்டதை
   திருத்தந்தை 13ஆம் கிரகோரியார் -பிரகடனம் செய்தார்
2. கிரகோரியன் காலண்டரே-கி.பி.கி.மு. ஆண்டாகி ஆங்கிலேயரால்
   அனைத்து உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட ஆண்டாக்கியது
3. கிறிஸ்தவரும் கோவிலிலும். காலண்டரிலும்-ஆங்கில புத்தாண்டென்று
   கொண்டாடலாமா? அறிவிக்கலாமா??-அந்நியப்படுத்திடலாமா???
4. ஆகவே கிறிஸ்தவராவது-கோவிலிலும். காலண்டரிலும்.-
   ஆண்டவரின் புத்தாண்டென்று-அறிவிக்கலாமே!
5. இயேசுவே ஆண்டவரென்று அறிவிக்க-காலண்டரும். கல்வெட்டும்
   கல்யாண பத்திரிக்கையும் கூட-எளிதான ஊடகங்களே! - ஒரு கிறிஸ்தவர்

இந்தக் கருத்தை. இந்த நியாயமான. உண்மையான கருத்தை நாம் ஏற்றுக் கொண்டு செயல்படுத்தினால் இதன் வழியாகவும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார் என்பதை உணர்வோம். கிறிஸ்துவை அறியாத மக்கள் கூட 'கி.பி' என்று ஆண்டை குறிப்பிடும்போது தங்கள் நாளிதழ்கள். மாத இதழ்கள் மற்ற எல்லா இதழ்கள் வழியாகவும். அவர்களை அறியாமலே கிறிஸ்துவை. வரலாற்று நாயகனை அறிவிக்கிறார்கள். இன்று பாட புத்தகங்களில் (பொ.ஆ) என்ற கருத்துருவை நுழைக்க தொடங்கிவிட்டனர். எனவே நாம் விழிப்படைய வேண்டியது காலத்தின் கட்டாயம். நமது அனைத்து நிகழ்வுகளிலும் 'கி.பி' என்பதை வலியுறுத்துவோம்.

இந்த ஆண்டு. கிபி 2025 மட்டுமல்ல நம் வாழ்நாள் முழுவதும் நாம் பாதுகாப்பாக இருப்போம் என்று நம் தந்தை வாக்குறுதி (இச 33:25) அளித்திருக்கிறார். நாம் அவரது உண்மை சீடராக இருக்கும்போது இந்த வாக்குறுதி நம்மில் நிறைவேறும். ஏனென்றால் என்றுமுள்ள கடவுளே நமக்கு புகலிடம். என்றுமுள்ள அவரது புயம் நமக்கு அடித்தளம் என்று (இச 33: 27) திரு விவிலியம் சொல்கிறது. அவர் நமக்கு உதவிட வானங்களின் வழியாக தமது மாட்சியுடன் மேகங்களின் மீது ஏறி வருவார் (இச 33:27). அவரைப்போல நமக்கு உதவிட யாருமில்லை நம்பிக்கை என்ற விளக்கை

ஏந்தி, அவரை எதிர்கொள்வோம். எங்கிருந்து நமக்கு உதவி வரும்? விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவரிடமிருந்தே நமக்கு உதவி வரும் (திபா 121:1).

உளவியலில் 'அகப்பேச்சு' என்று ஒன்று உண்டு. தாவீது தனது பாடலில் அப்படிப்பட்ட அகப் பேச்சு பலமுறை பேசியிருக்கிறார். எடுத்துக்காட்டாக மேலே சொன்ன திருப்பாடல் வரிகளை(திபா 121:1) எடுத்து வாசித்துப் பாருங்கள். அதேபோல் திபா 27:1.4.5.6.13.14 ஆகிய பகுதிகளையும் வாசித்துப் பாருங்கள். இப்படிப்பட்ட ' அக பேச்சு' திருப்பாடல் வரிகளில் அதிகம் உண்டு. இதை நாம் அடிக்கடி மீண்டும் மீண்டும் நம்பிக்கையோடு பேசலாம். அதற்கு அளப்பரிய பலன் உண்டு.

கடவுள் நமக்கு அடைக்கலமும் ஆற்றலமாய் உள்ளார். இடுக்கணுற்ற வேலைகளில் நமக்கு உற்ற துணை அவரே (திபா 46:1). நம்முடைய ஆபத்தான இக்கட்டான நேரத்தில் அவரே நமக்கு ஆற்றல் அளிக்கிறார். நெருக்கடியான நேரத்தில் நமக்கு அவர் அரணும், அடைக்கலமாய் இருக்கிறார் (திபா 59:16). அப்படிப்பட்டவரை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும்.

எரேமியா கடவுளைப் பார்த்து ஆண்டவரே! என் வலிமையே! என் அரணே! துன்பகாலத்தில் என் புகலிடமே (எரே 16:19) என்று அறிக்கையிடுகிறார். யாரெல்லாம் ஒடுக்கப்படுகிறார்களோ அவர்களுக்கு ஆண்டவரே அடைக்கலமாக இருக்கிறார். நெருக்கடியான வேளைகளில் அவரே புகலிடமாய் இருக்கிறார் (திபா 9:9). இதை என் அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். மற்றவர்களின் அனுபவம் நமக்கு முழுமையாக உதவாது. நம் சொந்த அனுபவமே ஆண்டவர் எப்படி நமக்கு அடைக்கலமாய், புகலிடமாய், அரணாய், கோட்டையாய் இருக்கிறார் என்பதை புரிய வைக்கும். என்னுடைய பல்வேறு நெருக்கடியான, இக்கட்டான, வேறு வழியே இல்லை என்ற நேரங்களில் ஆண்டவரே எனக்கு அரண் ஆனார். என் கடவுள் எனக்குப் புகலிடம் தரும் பாறையாக விளங்கினார் (திபா 94:22) என்று உணர்ந்த நாட்கள் பல உண்டு.

நாம் எளிய மனத்தோடு, தாழ்ச்சியோடு வாழும்போது அவர் நமக்கு அரணாக இருக்கிறார். நமக்கு துன்பம் வரும்போது உறைவிடமாய் இருக்கிறார். புயல் காற்றுகளில் புகலிடமாகவும், கடும் வெப்பத்தில் குளிர் நிழலாகவும் இருக்கிறார்(எசா 25:4, 32:2) என்பதை அறிந்து கொள்வோம். நாம் எளிய மனத்தோராய் இருந்தால், நம் விண்ணப்பத்திற்கு செவி சாய்கிறார் என்பதை அறிந்து நடந்து கொள்வோம். ஆண்டவரே தம் மக்களுக்கு புகலிடமும் அரணும் அவரே என்று யோவேல் (3:16) சொல்கிறார்.

எனவே அகப்பேச்சு என்று எழுதி இருந்தேனே அதை அடிக்கடி நம்மோடு பேசிக்கொள்வோம் . 'நெஞ்சே! ஆண்டவரே என் கற்பாறை, என் கோட்டை, என் மீட்பர், என் இறைவன், நான் புகலிடம் தேடும் மலை, என் கேடயம், மீட்பளிக்கும் வல்லமை, என் அரண் ' (திபா 18:2) என்று அடிக்கடி நம்மிடமே சொல்லிக் கொள்வோம்.

ஆண்டவரை நாம் புகலிடமாக, கற்பாறையாக, மீட்பராக, கோட்டையாகக் கொண்டு வாழும்போது நாம் ஒருபோதும் அசைக்கப்பட மாட்டோம் (எசா 62:2.6). இந்த ஆண்டு முழுவதும் கடவுளின் உன்னத பாதுகாப்பில் வாழ ஒருவர் ஒருவருக்காய் செபிப்போம். இந்த ஆண்டு மட்டுமல்ல, நம் வாழ்நாள் எல்லாம் அவரை புகலிடமாக, கோட்டையாக, அரணாக, மீட்பராக, அடைக்கலமாக, புகலிடமாக கொண்டு வாழும்போது எல்லா ஆசிகளாலும் நாம் நிரப்பப்படுவது உறுதி.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 1.12.2024 அன்று நடைபெற்றது. 8 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A. பிரான்சிஸ் சேவியர், நற்பணி A. ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி II காளையார்கோவில், தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 1.12.2024 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S. ராணி, நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி P. சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - III இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை ஆலயத்தில் 8.12.2024 அன்று நடைபெற்றது. 2 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல், நற்பணி A. சத்தியேந்திரன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - IV சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 8.12.2024 அன்று நடைபெற்றது. 8 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M சகயாமேரி, நற்பணி A. யூஜின் அமல்ராஜ், நற்பணி M லூயிஸ் ஜான்போஸ்கோ ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 8.12.2024 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. ஆரோக்கியசாமி, நற்பணி S. சகாயராணி, நற்பணி M. அந்தோனி பிரகாஷ், நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 14.12.2024 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி G.M.S. ராணி, நற்பணி X. லூர்துமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 14.12.2024 அன்று நடைபெற்றது. 10 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை, Sr. பச்சை ஜோதி, நற்பணி A.சகாயராஜா, நற்பணி S.பால்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 14.12.2024 அன்று நடைபெற்றது. 11 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி M. அருள் மரிய நாயகம், நற்பணி A. சந்திரபுஷ்பா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில் 22.12.2024 அன்று நடைபெற்றது. 14 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி S. தைனேஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

## டிசம்பர் 2024 கடந்த மாதச் செயல்பாடுகள்

நவம்பர் 30 - டிசம்பர் 1 ஆகிய நாட்களில் பூண்டி தியான மையத்தில் வட்டார கண்காணிப்பாளர்களுக்கான பணித் தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. இதில் 33 பணியாளர்கள் கலந்துகொண்டனர். இப்பயிற்சியை அருட்திரு ரொடால்ப் CMF வழிநடத்தினார்கள் .

03.12. 2024 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 31 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி K. குளோரி, நற்பணி J. எலிசபெத்ராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

03.12. 2024 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 66 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி A. ஜான்சிராணி, நற்பணி S.இஞ்ஞாசியம்மாள், நற்பணி M. மலர் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

07.12. 2024 அன்று பரமக்குடி பங்கில் 2ஆம் வத்திக்கான் சங்க கொள்கைத் திரட்டுகள் குறித்த விளக்க கூட்டம் நடைபெற்றது. 25 பணியாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

07.12.2024 அன்று திருச்சி அருங்கொடை மையத்தில் பொதுநிலையினருக்கான சீடத்துவ அறிமுகப்பயிற்சி நடைபெற்றது. திருச்சி மறைமாவட்டத்தின் அனைத்து பங்குகளிலிருந்தும் 180க்கு பேருக்குமேல் பங்கேற்ற இப்பயிற்சியை செயலர் வழிநடத்தினார்.

08.12. 2024 அன்று தங்கச்சிமடம் புனித திரேசாள் கோவிலில் 2ஆம் வத்திக்கான் சங்க கொள்கைத் திரட்டு குறித்த விளக்க கூட்டம் நடைபெற்றது. 25 பணியாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

08.12. 2024 அன்று சாயல்குடி பங்கு மேல முந்தல் கிராமத்தில் முத்துப்பேட்டை வட்டார பணியாளர்கள் நற்பணி மார்கஸ், நற்பணி ததேயுஸ் ஆகியோர் தொடர்களப்பணி ஆற்றினார். அருள்தந்தை இன்பென்ட் அவர்கள் ஒப்புரவு வழங்கினார்

20.12. 2024 அன்று சாயல்குடி பங்கு மேல முந்தல் கிராமத்திற்கு முத்துப்பேட்டை வட்டார பணியாளர்கள் அனைவரும் சென்று கிறிஸ்துமஸ் விழா கொண்டாடி முந்தல் கிராம மக்களுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

27.12.2024 கருத்தூட்டாளர் பயிற்சி பட்டறை அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது. இதில் 22 பணியாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

டிசம்பர் 2024

# வட்டாரத் தியானக் கூட்டங்கள்

**செஞ்சை வட்டாரம்**

செஞ்சை வட்டாரத் தியானக் கூட்டம் 22.1.2024 ஞாயிறன்று காலை 10.00 மணிக்கு ரஸ்தா புனித அருளானந்தர் கோவிலில் நடைபெற்றது. தொடர்பாளராக கலந்து கொண்ட நற்பணி A.தன்நாயகம் நற்செய்தி பணியாளராகய நான் வெற்றி வாழ்வு வாழ்கிறேனா? என்ற மையச் சிந்தனையில் இறைச் செய்தி வழங்கி கூட்டத்தை நெறிப்படுத்தினார். அருள்தந்தை அகஸ்டின் அவர்கள் கலந்து கொண்டு பணியாளர்களை வாழ்த்தினார். 36 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி M. **விசுவாசம்**. வட்டாரக் கண்காணிப்பாளர்

**மகிண்டி மிக்கேல்பட்டணம் வட்டாரம்**

மகிண்டி மிக்கேல் பட்டண வட்டாரத் தியானக் கூட்டம் 15.12.2024 அன்று திருவரங்கம் பங்கு புத்தூர் நற்பணி இராணி இல்லத்தில் நடைபெற்றது. செயலர் தொடர்பாளராக கலந்து கொண்டு நற்செய்தி பணியாளராகய நான் வெற்றி வாழ்வு வாழ்கிறேனா? என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கினார் 17 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி M. **அடைக்கலம்** . வட்டாரக் கண்காணிப்பாளர்

**சி.கே. மங்கலம் வட்டாரம்**

சி.கே. மங்கள வட்டாரத் தியானக் கூட்டம் 15.12.2024 அன்று காலை 10.00 மணி அளவில் கடுக்களூர் நற்பணி ஜே. ஆரோக்கியசாமி . நற்பணி ஆரோக்கிய மேரி அவர்களது இல்லத்தில் நடைபெற்றது. நெறியாளராக செயலர் கலந்து கொண்டார். 2 திமோ 4:7 ன் படி நற்செய்தி பணியாளராகிய நான் வெற்றி வாழ்வு வாழ்கிறேனா? என்ற தலைப்பில் செய்தி வழங்கினார். 34 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி M. **டேவிட்**. வட்டாரக் கண்காணிப்பாளர்

**இராம்நகர் வட்டாரம்**

இராம்நகர் வட்டாரத் தியானக் கூட்டம் 22.12.2024 அன்று முள்ளிக்குண்டு நற்பணி குளோரி அவர்கள் இல்லத்தில் காலை 10.30 மணிக்கு புகழ்ச்சி வழிபாட்டுடன் தொடங்கியது. தொடர்பாளராக நற்பணி ஜே. ஆரோக்கியசாமி கலந்து கொண்டு நற்செய்தி பணியாளராகிய நான் வெற்றி வாழ்வு வாழ்கிறேனா? என்ற தலைப்பில் செய்தி வழங்கினார். 28 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி S. **ஆரோக்கியசாமி**. வட்டாரக் கண்காணிப்பாளர்

**சாலைகிராமம் வட்டாரம்**

சாலைகிராமம் வட்டாரத் தியானக் கூட்டம் 15.12.2024 அன்று இளையான்குடி உலக மீட்பர் கோவிலில் பங்குப்பணியாளரின் தொடக்க செபத்துடன் ஆரம்பமானது. 32 பணிாளர்கள் கலந்து கொண்ட இத்தியானக் கூட்டத்தை நற்பணி GMS ராணி அவர்கள் தொடர்பாளராகக் கலந்து கொண்டு நற்செய்தி பணியாளராகிய நான் வெற்றி வாழ்வு வாழ்கிறேனா? என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்.

நற்பணி **ஜோன்ஸ் மேரி**. வட்டாரக் கண்காணிப்பாளர்

**சிவகங்கை வட்டாரம்.**

சிவகங்கை வட்டார தியானக் கூட்டம் 22-12-24 ஞாயிற்றுக்கிழமை சிவகங்கை முத்துப்பட்டியில் உள்ள நற்பணி ரோனிக்கம்மாள் இல்லத்தில் நடைபெற்றது. 23 நற்செய்தி பணியாளர்கள் கலந்து கொண்ட இககூட்டத்தில் செயலர் நெறியாராகியக் கலந்துகொண்டு 'நற்செய்தி பணியாளராகிய நான் வெற்றி வாழ்க்கை வாழ்கிறேனா?' என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கினார்கள்.

நற்பணி **எல். ஜோசப் இருதயம்**. வட்டாரக் கண்காணிப்பாளர்..

## யூபிலி 2025 இறைவேண்டல்

விண்ணகத் தந்தையே.

உம் திருமகனும் எம் சகோதரருமான இயேசு கிறிஸ்துவில் நீர் எங்களுக்கு
வழங்கிய நம்பிக்கையும் தூய ஆவியார் வழியாக எங்கள் இதயங்களில்
நீர் பற்றியெரியச் செய்த பிறரன்புச் சுடரும் உமது அரசின் வருகைக்கான
எதிர்நோக்கை எங்களில் தட்டி எழுப்புவனவாக!

நற்செய்தியின் விதைகளை நாளும் வளர்த்தெடுக்கும்
நல்லோராய் உம் அருள் எம்மை மாற்றுவதாக!
தீமையின் ஆற்றல்கள் மறைந்து உம் மாட்சி நீடித்து ஒளிரும் பொருட்டு
மானிட உள்ளங்களும் முழு அண்டவெளியும் புதிய விண்ணகம்
புதிய மண்ணகம் நோக்கிய காத்திருத்தலில் மாற்றம் பெறுவனவாக!

யூபிலிக் கொண்டாட்டத்தின் அருள் விண்ணகச் செல்வங்களுக்கான ஆர்வத்தை
எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய எம்மில் தூண்டி எழுப்புவதாக!
அதே அருள் எம் மீட்பரின் மகிழ்ச்சியையும் அமைதியையும்
அகிலமெங்கும் அளிப்பதாக!

என்றென்றும் போற்றுதற்குரிய எம் கடவுளாகிய உமக்கே
மாட்சியும் புகழும் இன்றும் என்றும் உரித்தாகுக!
ஆமென்.

-திருத்தந்தை **பிரான்சிஸ்**

# ஆடுகளுக்கு வாயில் நானே

உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள். (மத் 5:48).

நாம் வழிபடுகின்ற நம் விண்ணகத் தந்தை அனைத்திலும் நிறைவுள்ளவராக இருக்கிறார். அது போல அவரது சாயலில் படைக்கப்பட்ட நாமும் அனைத்திலும் நிறைவுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே அவரது விருப்பம். எனவேதான் மனிதனைப் படைப்பதற்கு முன்பே அவனுக்கு தேவையான அனைத்தையும் ஏதேனில் படைத்திருந்தார். நான்கு ஆறுகள் ஓடின. வறட்சி என்பதே அங்கு இல்லை. பொன் விளையும் நிலம். அதுவும் பசும்பொன் உள்ள இடமல்ல. மாறாக பொன் விலையும் நிலம். இன்றைக்கு திருமணத்திற்குப் பொன் வாங்க வேண்டுமானால் உள்ளமே உடைந்துவிடும் அளவுக்கு அதன் விலை. ஆதாமும் ஏவாளும் விண்ணகத தந்தையின் நிறைவான ஆசிரால் நாள்தோறும் ஏதேனில் மகிழ்ந்திருந்தார்கள். அலகை மனிதன் தோன்றுவதற்கு முன்பே தூதனாக இருந்தவன் தனக்குப் பின்னால் படைக்கப்பட்ட மனிதனுக்கு இத்தனை ஆசீர்வாதங்களா? என்று பொறாமையால் சூழ்ச்சி செய்து தனது பொய்யான வார்த்தையால் கடவுளின் நிறைவிலிருந்து ஆதாமையும் ஏவாளையும் பிரித்து விட்டான். இப்போது தந்தையின் நிறைவை இழந்து இலைகளை ஆடையாக அணிந்து கொண்டு அச்ச உணர்வோடு குறைவுள்ளவர்களாக கடவுளை விட்டு தூரமாக நின்றார்கள். கடவுள் தந்த ஆசிரை முழுவதுமாக இழந்துபோனார்கள். இந்த குறைவைப் போக்கி மீண்டும் மனுகுலத்திற்குகு நிறைவான ஆசியை வழங்கும்படி கடவுள் ஆபிரகாமை அழைத்தார்.இந்த ஆபிரகாமும் கடவுளை அறியாத குடும்பத்தில் பிறந்ததவர். அவருக்கு நாகோர் என்ற சகோதரர் உண்டு. அவர்களின் தந்தை தெரகு வேற்று தெய்வங்களுக்கு ஊழியம் செய்தவர் (யோசு 24:2). எனவேதான் கடவுள் ஆபிரகாமை அழைக்கும்போதே உன் நாட்டிலிருந்தும். உன் இனத்தவரிடமிருந்தும். உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். நான் உன்னை பெரிய இனமாக்குவேன். உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும் என்று மிகப்பெரிய வாக்குறுதியைக் கொடுத்தார். ஆபிரகாமும் அப்படியே கீழ்படிந்து புறப்பட்டுச் சென்றார். (தொநூ 12:1-4) இந்த ஆபிரகாமுக்கு கடவுள் அளித்த வாக்குறுதி பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த மக்களுக்கு மட்டும்தான் என்று நினைத்துக்கொண்டு இன்றைக்கு அனேக கிறிஸ்தவர்கள் ஏன் பணியாளர்களும் கூட அதைப்பற்றி அக்கறையற்றவர்களாய் இருப்பதால் அந்த நிறைவுள்ள ஆசீர்வாதங்களுக்கு தொலைவில் நின்று கொண்டிருக்கிறோம். ஆபிரகாமுக்கு கடவுள் அளித்த வாக்குறுதியை நாம் கவனமாகப் படித்தால் அந்த ஆசீருக்குள் நாமும் இருக்கிறோம் என்பது தெளிவாகப் புரியும். உன் வழியாக மண்ணுலகின் மக்களினம் அனைத்தும் ஆசிபெறும் என்று கூறப்பட்டது. புதிய ஏற்பாட்டில் ஆபிரகாமைப் பற்றி கல இடங்களில் குறிப்பிட்டபோதெல்லாம் நிறைவேறுகிறது. முதல் நற்செய்திப் பகுதியிலேயே நம் ஆண்டவரை தாவீதின்

மகனும் ஆபிரகாமின் மகனுமாகிய இயேசு என்று கூறப்பட்டுள்ளது (மத் 1:1). ஆதாமும் ஏவாளும் இழந்துபோன ஆசிரை நமக்குப் பெறவே இயேசு இவ்வுலகில் வந்தார்.. எனவேதான் சக்கேயுவுக்கு ஆசீரைக் கூறிவிட்டு இவரும் ஆபிரகாமின் மகனே என்றார். (லூக் 19:9-10). அதுபோல பதினெட்டு ஆண்டுகளாக கூன் விழுந்தப் பெண்ணை குணமாக்கி இவரும் ஆபிரகாமின் மகள் என்றார் (லூக் 13:16). ஆபிரகாமை நம் நம்பிக்கையின் தந்தை என்று அழைக்கிறோம். உலக மக்களுக்கு ஆதிப் பெற்றோர்? ஆதாமும் ஏவாளும் ஆனால் கிறிஸ்தவர்களுக்கு தந்தையும் தாயும் யார் என்பதை அறிவது மிக அவசியம். ஏசாயா கூறுவதை கவனிப்போம். விடுதலையை நாடுவோரே ஆண்டவரைத் தேடுவோரே எனக்குச் செவி கொடுங்கள். நீங்கள் எந்தப் பாறையினின்று செதுக்கப்பட்டீர்களோ எந்த குழியிலிருந்து தோண்டப்பட்டீர்களோ அதை நோக்குங்கள் உங்கள் தந்தை ஆபிரகாமையும் உங்களைப் பெற்றெடுத்த சாராளையும் நினைத்துப் பாருங்கள் என்கிறார் (ஏசா 51:1-2). ஆபிரகாமுக்குக் கடவுள் வாக்களித்தபடியே அனைத்து ஆசியையும் பெற்று முதியவராகி நிறைந்த வாழ்நாள்களைக் கடந்து நல்ல நரை வயதில் இறந்து தம் மூதாதையரோடு சேர்த்துக் கொள்ளப்பட்டார். நம் ஆண்டவர் ஆபிரகாமைப் பற்றிப் பேசும்போது யூதரிடையே மிகப்பெரிய வாக்குவாதம் நடைபெற்றது (யோ 8:31-59). கடவுள் ஆபிரகாமுக்குத் தோன்றி உன் வழிமரபினருக்கு இந்த நாட்டைக் கொடுப்பேன் என்றார் (தொநூ 12:7). இதைப் புனித பவுல் எவ்வளவு தெளிவாக விளக்குகிறார் என்பதைக் கவனிப்போம். வாக்குறுதிகள் ஆபிரகாமுக்கும் அவரது வழிமரபினருக்கும் தரப்பட்டன. பலரைக் குறிக்கும் முறையில் வழிமரபினர்களுக்கு என்று இல்லாமல் ஒருவரையேக் குறிக்கும் முறையில் உன் வழி மரபினருக்கு என்று உள்ளது. அந்த வழிமரபினர் கிறிஸ்துவே (கலா 3:16). ஆபிரகாமுக்கு அருளப்பட்ட அந்த நிறைவான ஆசீரைப் பெறுவதற்கான வழி ஆண்டவர் இயேசு மட்டுமே. ஏனெனில், ஆதாம் ஏவாளின் கீழ்ப்படியாமையால் ஏதேன் தோட்ட கதவு அடைக்கப்பட்டது. எந்த மனிதராலும் அதைத் திறக்க முடியாமல் போயிற்று. அதைத் திறக்க பாவமில்லாத ஆட்டுக்குட்டியின் இரத்தம் தேவைப்பட்டது. எனவேதான் பாவமில்லாத நம் ஆண்டவர் அவரது தூய இரத்தத்தைச் சிந்தி அந்த வழியைத் திறந்தார் (எபி 10:19-20). இன்றைக்கு அநேக கிறிஸ்தவர் ஏன் நற்செய்திப் பணியாளரும் கூட ஆண்டவர் இயேசுவை நம் பாவமன்னிப்புக்கு மட்டுமே அவர் தேவை என்று நினைத்துக்கொண்டு. மற்ற தேவைகளுக்கெல்லாம் அன்னை மரியாவையும் புனிதர்களாயும் கடவுளாக நினைத்து வழிபடுவதால் ஆபிரகாமுக்கு அருளப்பட்ட மிகப்பெரிய ஆசியை பெற முடியாதவாறு தொலைவில் நிற்பதை நாம் காண்கிறோம். நாமும் நம் குடும்பங்களும் அந்த ஆசியை நிறைவாகப் பெற்று மகிழவே அழைக்கப்பட்டிருக்கிறோம். மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர் என்று எழுதியுள்ளவாறு நமக்காக கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மை சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார். ஆபிரகாமுக்கு கிடைத்த ஆசி இயேசு

கிறிஸ்துவின் வழியாய் பிற இனத்தார்க்கும் கிடைக்கவும் வாக்களிக்கப்பட்ட தூய ஆவியானவரை நாம் நம்பிக்கையின் வழியாய்ப் பெற்றுக் கொள்ளவுமே இவ்வாறு செய்தார் (கலா 3:13-14). நம் ஆண்டவர் மீது முழு நம்பிக்கை வைக்கும்போது நாமும் அந்த ஆபிரகாமுக்கு அருளப்பட்ட ஆசிருக்கு உரியவராய் இருக்கிறோம். உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளராக இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாக இருங்கள் என்றார். நிறைவுள்ளவர் என்பதை வெறும் வார்த்தையால் மட்டுமல்ல செயலிலும் காட்டினார். ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்தேன் என்றார். கானாவூர் திருமண வீட்டில் நிறைவைக் காணச் செய்தார் (யோவா 2). வலைகள் கிழியும் அளவுக்கு மீன்கள் கிடைக்கச் செய்தார் (லூக் 5). ஐந்து மீன்களைக் கொண்டு ஐயாயிரம் பேர் உண்ட பின்பும் மீதம் இருந்தது (யோ 6). அவரிடம் வந்த ஒருவர் கூட குறைவுப்பட்டுப் செல்லவில்லை. இறுதியில் அனைவருடைய பாவங்களுக்காகத் தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்கு தெரியவில்லை என்று பரிந்து பேசினார் (லூக் 23:34). இவ்வாறு அவர் நிறைவுள்ளவராக தமக்குக் கீழ்படிவோர் அனைவரும் என்றென்றும் மீட்படையக் காரணமானார் (எபி 5:9). நம் விண்ணகத் தந்தை எவ்வளவு நிறைவுள்ளவர் என்பதை வாழ்ந்து காட்டி அந்த நிறைவைப் பெறுவதற்கான வழியையும் நமக்கு முன்பாக வைத்துள்ளார். ஆட்டுக் கொட்டிலில் வாயில் வழியாக நுழையாமல் வேறு வழியாக ஏறிக் குதிப்போர் திருடர் அல்லது கொள்ளையராய் இருப்பர் என்றார் (யோவா 10:1). எனவே, இந்தப் புதிய ஆண்டில் நம் பணிக்குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக அருளப்பட்டுள்ள ஆபரகாமுக்கு கிடைத்த அந்த நிறைவான ஆசியைப் பெற்று மகிழும்படி வேண்டுவோம். இவ்வாறு நாமும் நம் குடும்பங்களும் நிறைவாக வாழும்போது அதன் வழியாக நம் விண்ணகத் தந்தையின் திருப்பெயர் போற்றப்படும். இவ்வாறு உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க. அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள். ((மத் 5:16)

நற்பணி **ஆ.விசுவாசம்,** செஞ்சை.



**அனைவருக்கும்**
**பொங்கல்**
**மற்றும்**
**தமிழர் திருநாள்**
**வாழ்த்துகள்**



## ஒரு பணியாளரின் மன்றாட்டு



இன்னும் ஒரு ஆண்டைக் காணச் செய்து,தம் அன்பினால் புத்துயிர் அளிக்கும் ஆண்டவரே! நீர் எம் நடுவில் எப்போதும் இருக்கிறீர் என்று எண்ணி எதையும் செய்திடவும் (செப் 3:17). எதைச் சொன்னாலும்,எதைச் செய்தாலும் உம் பெயரால் செய்து நன்றி செலுத்திடவும் (கொலோ 3:17). அன்பே என் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் (எபே 3:17)இந்தப் புத்தாண்டில் அமைந்திட, வரம் அருள வேண்டும் என்று இறைவா! உம்மை மன்றாடுகிறேன்.

## சனவரி 2025 வட்டாரத் தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 05 | புளியால் 9787491588 | நற்பணி S. சகாயராணி 9442254152 |
| 2. | 05 | சருகணி 9943632636 | நற்பணி A. சகாயராஜா 944356952 |
| 3. | 05 | ஆவுடைபொய்கை 8489703006 | நற்பணி A. சத்தியேந்திரன் 6379405762 |
| 4. | 05 | தேவகோட்டை 9095866732 | நற்பணி J. ஆரோக்கியசாமி 8248899247 |
| 5. | 18 | தங்கச்சிமடம் 9585998444 | நற்பணி A. சகாயராஜா 944356952 |
| 6. | 18 | இராமேஸ்வரம் 9047998614 | நற்பணி M. மரியகிரகோரி 9486965799 |
| 7. | 18 | பாம்பன் 9790605049 | நற்பணி GMS. ராணி 965526448 |
| 8. | 19 | இராஜசிங்கமங்கலம் 9843752061 | செயலர் 9787967272 |
| 9. | 19 | மானாமதுரை 9944386477 | நற்பணி A. சகாயராஜா 944356952 |
| 10. | 26 | இடைக்காட்டூர் 9442857812 | நற்பணி L. ஆரோக்கியசாமி 9150579311 |
| 11. | 26 | சாயல்குடி 6383152402 | செயலர் 9787967272 |

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்** www.arulchandrunilayam.org

# தர்மம்

தர்மம் என்பது தேவையில் இருப்பவர்களுக்கு அன்பு காட்டி உதவி செய்வது. நம்முடைய உடல் உழைப்பையும் நேரத்தையும் மற்றவர்களுடைய நன்மைக்காகச் செலவு செய்வது. சோர்வுற்றோர் நெறிதவறியோர் ஆகியோருக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் சரியான வழியைக் கற்பிப்பதும் தர்மமாக கருதப்படும். தர்மம் செய்வது கிறிஸ்தவ வாழ்வுக்கு மிகவும் அவசியமானது. தர்மம் நம்முடைய மனவிருப்பத்தின்படி செய்யும் செயல் அல்ல. அது இறைவனுடைய விருப்பத்தின்படி செய்வது. இறைவனுக்குப் பிரியமானது (2 கொரி 9:7, எபி 13:16). எனவே, ஒவ்வொருவரும் தர்மம் செய்ய வேண்டுமென்றே இறைவன் எதிர்பார்க்கிறார்.

நம்முடைய நற்செயல்களை இறைவன் அறிவார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை (திபா 139:2) இறைவன் நம்முடைய நற்செயலைப் பார்த்து மட்டுமல்ல அவற்றின் நோக்கம் என்ன என்பதையும் கவனிப்பவர். கிறிஸ்தவ வாழ்க்கையின் நோக்கம் மனிதர்களின் கவனத்தைத் தன்னிடம் அல்ல, இறைவனிடம் இழுக்கும்படியாக இருக்கவேண்டும். இறைவனை மகிமைப்படுத்த வேண்டுமே தவிர, மனிதனை அல்ல. மனிதர்களின் பாராட்டையும், புகழையும் பெறுகின்ற வகையில் சுயநல நோக்கத்தோடு தர்மம் செய்யும்போது அதன் பயனாக இந்த உலகத்தின் செல்வாக்கைத் தாராளமாய்ப் பெற்று கைம்மாறும் அடைந்து கொள்கிறார்கள். இவர்கள் இவ்வுலகமே கதியென வாழ்ந்து மடியும் மனிதர்கள் (திபா 17:14). இப்படிப்பட்டவர்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து எந்த ஒரு கைம்மாறும் பெற்றுக்கொள்ளவே முடியாது என்று இயேசு ஆண்டவர் கூறுகிறார். ஆகவேதான், 'நீங்கள் தர்மம் செய்யும்போது உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்' (மத் 6:3) என்கிறார்.

ஒரு மனிதனுடைய இடது கையைவிட வலதுகையே அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, தர்மம் செய்ய அதைப் பயன்படுத்துவது முறைதான். ஆனால், 'வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்" என்று இயேசு ஆண்டவர் சொல்வதன் பொருள் அதாவது, நாம் தர்மம் செய்யும்போது மற்றவர்களுக்குத் தெரியாதபடி மறைவாய்ச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மட்டும் போதாது, நாம் செய்கிற இந்த நற்செயலை நாமே அறிந்து கொள்ளக் கூடாது. அது பற்றி நம்முடைய டைரியில் எழுதி வைக்கக் கூடாது. மனிதனை மேம்படுத்திக் கொள்வதால் ஏற்படும் ஆபத்தை நாம் அறிந்து செயல்பட வேண்டும் (திப 12:23). நாம் தர்மம் செய்யும்போது நம்மை அறியாமலேய நம்மை குறித்த ஒரு பெருமை உணர்வு நமக்குள் வந்து விடுகிறது. இந்தக் கடமையைச் செய்யாதவர்களைவிட நம்மை உயர்ந்தவர்களாக நினைக்க ஆரம்பிக்கிறோம். மேலும், நம்முடைய குடும்பத்தாருக்கும் தெரியாதபடி மறைவாய்த் தர்மம் செய்யவேண்டும். ஆகவே, உற்றார், உறவினர், உலகத்தார் நம்மை கைதட்டிப் பாராட்டுவார்கள் என்ற எண்ணமோ, ஏக்கமோ எதிர்பார்ப்போ நம்மிடம் இருக்கவே கூடாது. ஏனெனில், செல்வமும் மாட்சியும் இறைவனிடமிருந்தே வருகின்றன (1குறி 29:12). ஆகவே, இறைவன் பெயர் மட்டுமே மகிமை பெறும் வகையில் நாம் தர்மம் செய்ய வேண்டும். அப்பொழுது, மறைவாய் உள்ளதைக் காணும் இறைவன் நமக்கு கைம்மாறு அளிப்பார்.

**தர்மம் செய்வதால் வரும் ஆசீர்**

(i) நாம் மனிதர்களுக்குச் செய்யும் உதவிக்கு இறைவன் எப்படி கைம்மாறு செய்வார் என்று நாம் நினைக்கலாம். இதற்கான பதிலை மத் 25:40ல் ஆண்டவரே கூறுகிறார். ஏழை எளியவர்களுக்குச் செய்த நன்மைகள் அனைத்தையும் தானே பெற்றுக் கொண்டதாக சொல்லி மனமகிழ்கிறார். இயேசுவின் சகோதர, சகோதரிகள் என்று சொல்லக் கூடிய ஏழை எளியவர்களுக்கு நாம் தர்மம் செய்யும்போது எப்படி அவரால் கைம்மாறு செய்யாமல் இருக்க முடியும். 'ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்: அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித்தந்து விடுவார்' (நீமொ 19:17).

(ii) செல்வரான இளைஞர் ஒருவர் இயேசுவிடம் வந்து போதகரே நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு நான் என்ன நன்மை செய்யவேண்டும்? என்று கேட்டார். அதற்கு இயேசு 'நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடைமகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்' (மத் 19:21) என்கிறார். ஆக, ஏழை எளியவர்களுக்குச் செய்யும் நன்மை இறைவனுக்கே செய்வதால், இறைவனின் மேலான ஆசீரை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

> ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்கிறவர்
> ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்.
> (நீமொ 19:17)

**தர்மம் செய்தலின் அவசியம்**

(i) இறுதித் தீர்ப்பு நாளில் மானிடமகன் மாட்சியுடன் வரும்போது, நன்மை செய்தோரை முடிவில்லா பேரின்ப வாழ்வுக்கும், நன்மை செய்யாதோரைப் பார்த்து 'சபிக்கப்பட்டவர்களே என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள்' (மத் 25:41) என்று சொன்னதைக் கேட்டு அவர்கள் திகைத்து நிற்கையில் ஆண்டவர் கூறுகிறார் : 'மிகச் சிறியோராகிய ஏழை எளியவாகளுக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கே செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் ' (மத் 25:45) என்று சொல்லி அவர்களை முடிவில்லாத் தண்டனைக்கு அனுப்புகிறார்.

(ii) செல்வம் படைத்த ஒரு மனிதனும் அவனை நம்பியிருந்த ஏழை இலாசரைப் பற்றியும் நாம் அறிவோம். செல்வம் படைத்த மனிதர் செய்த ஒரே தவறு, தன் வீட்டு வாசலருகே கிடந்த ஏழை லாசரைக் கண்டு கொள்ளாமல் இருந்ததுதான். அதற்காக மறுமையில் அவன் பயங்கரமான தண்டனையை அனுபவிக்கிறான். இந்தத் தீப்பிழம்பில் மிகுந்த வேதனைப் படுகிறேன் (லூக் 16:24) என்று கதறும் பரிதாபமான நிலையில் அவன் ஒரு சொட்டுத் தண்ணீருக்காக ஏங்குகிறான். ஆனால், அது அவனுக்குக் கொடுக்கப்படவில்லை. பூமியிலே வாழ்வைத் தீர்மானித்துக் கொள்ள சந்தர்ப்பம் கொடுக்கப்பட்ட போதும், அந்த செல்வந்தன் அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டான். ஆகவே, அவன் அணையாத நெருப்புக்குள் தள்ளப்பட்டான்.

பாருக் என்ற பெரும் பணக்காரார் திடீரென காணாமல் போனார். அவரது குடும்பத்தார்

அதிக செலவு செய்து தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகையால், அவரது வீட்டை விற்கும் பரிதாப நிலைக்கு வந்தனர். வீட்டை வாங்கியவர். அந்த இடத்தில். புதிய வீட்டைக் கட்டுவதற்கு. பழைய வீட்டை இடிக்க ஏற்பாடு செய்தார். வீட்டை இடிக்கும்போது தரையில் ஒரு ரகசிய அறை இருப்பதைக் கண்டார்கள். அந்த அறைக்குள் ஏராளமான பொன் செல்வங்களுடன் ஒரு உரு குலைந்த உடலும் கிடந்தது. நடந்து என்ன தெரியுமா? வழக்கம்போல ரகசிய அறைக்குள் இறங்கிய பணக்காரர். தானியங்கி கதவின் சாவியை எடுத்துச் செல்ல மறந்துவிட்டார். இப்படியொரு அறை இருப்பது வீட்டாருக்கே தெரியாது. யாருக்கும் தர்மம் செய்யாத அந்த கஞ்சனுடைய பணம் அவருக்கே ஆபத்தாய் மாறியது.

நாம் கடவுளின் கைவேலைப்பாடு. நற்செயல் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாகப் படைக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு நற்செயல் புரிந்து வாழும்படி கடவுள் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறார் (எபே 2:10). ஆகவே. ஆண்டவரின் கரங்களாக. இருந்து செயல்பட நம்மை அழைத்திருக்கிறார். எனவே. இறைவன் நம்மிடம் ஒப்படைத்த ஆசீர்வாதங்களைப் பிறருக்குக் கொண்டு செல்லும் வாய்க்கலாக செயல்பட அருள்புரிவாராக.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

## நற்செய்தியை அறிவி

புனித பவுல் நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு. இதை நானாக விரும்பிச் செய்வதால் எனக்குக் கைமாறு எனறு கூறுகிறார் (1 கொரி 9:16-17) நன்மைத் தனத்தின் ஊற்றாகிய இறைவனை அறிந்தவர்கள் அதை மறறவர்களிடம் கூறுவில்லையெனில் நோயாளியிடம் மருந்தை மறைக்கும் ஒரு மருத்துவர் போலாகிவிடும். குடும்பத்தில் அமைதி வேண்டுமென்றால் நற்செய்தியினை அறிவித்ததாக வேண்டும். எங்கே நற்செய்தி அறிவிக்கப்படுகிறதோ அங்கே அன்பும் அமைதியும் ஏற்படும். திருவிழாவிற்கு சென்று காணாமல் போன இயேசுவை தேடிச் சென்ற அவரின் பெற்றோர் அவர் எருசலேம் கோவிலில் அறிஞர்களுடன் உரையாடுவதைக கண்டனர். அவர்களுக்கு இயேசுவின் பதில் நான் என் தந்தையின் வேலையில் ஈடுபட்டிருக்கிறேன் என்பதாகும். தந்தையின் வேலை என்ன? நற்செய்தியினை அறிவிப்பதும் அதற்கு சான்று பகர்வதுமே ஆகும். இந்த பணி நம் ஒவ்வொருவருக்கும் தந்தையாகிய இறைவன் அளித்துள்ளார்.

நற்செய்தி அறிவிப்புப் பணி ஒரு வேலையன்று. அது ஒரு பதிலிருப்பதாகும். எடுத்துக்காட்டாக நம்மை ஒருவர் துன்புறுத்தினால் அந்நபரை பொறுத்துக் கொள்ளும்படி இயேசு சொல்கிறார். அப்படி நம் பொறுத்துக் கொண்டால் அது நமது பதிலிருப்பாகும். பொறுமையைக் கையாளும்போது நாம் நற்செய்தியை அறிவிக்கிறோம். முதலிடத்தில் இருக்க விரும்பினால் இறுதியில் சென்று இருக்கும்படி கூறுகிறார். ஒரு மைல் தூரம் நடக்க வேண்டுபவனிடம் இரண்டு மைல் தூரம் செல்ல வேண்டுகிறார். தூங்க வேண்டும் என்று கூறுபவனிடம்

விழித்திருந்து மன்றாட வேண்டுகிறார். சிலுவைகள் வேண்டாம் என்று மன்றாடக் கூடியவரை சிலுவைகளை ஏற்றுக்கொள்ளும்படி கூறுகிறார். சோதனைகளால் மனம் தள்ளாடியவனிடம் சோதனைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள கூறுகிறார். இதுவே இயேசு உலகிற்கு அறிவித்த நற்செய்தியாகும்.

நற்செய்தியை ஏற்றுக் கொண்டதால் அவலமான வாழ்க்கை வாழ்ந்த மகதலா மரியா, சமாரியப்பெண் மாதிரிப் பெண்களாகிறார்கள். மூன்று முறை இயேசுவை மறுதலித்த பேதுரு திரு அவையின் தலைவராகிறார். வரி வசூலித்த சக்கேயுவை பெரும் கொடை வள்ளலாகிறார். துன்பத்திலும், ஏமாற்றத்திலும் தடைகளிலும் கட்டுண்டிருப்பவர்களுக்கு விடுதலை அளிப்பதுதான் நற்செய்தி அறிவிப்புப் பணியாகும்.

நற்செய்தி அறிவிப்பு சமூகத்தின் பெரிய, அரிய மாற்றங்களை ஏற்படுத்தும். ஆதலால இயேசுவை அறிந்து கொண்டர்களும் தூய ஆவியாரின் வல்ல கொடைகளைப் பெற்றவர்களும் நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும்.

இறைவன் மட்டுமே போதும் என்ற மன ஊறுதியுடன் நம்முடைய நற்செய்தி அறிவிப்புப் பணியை மேற்கொள்வோம். இறைவன நமது தந்தை என்றும் நாம் அவருடைய பிள்ளைகள் என்ற உணரவோடு இயேசுவை இன்னும் ஆழமாக அறிவோம், இயேசுவை அறிவிப்போம். இதனால் ஆன்மாக்களை ஆதயமாக்குவோம்.

நற்பணி V.**செபஸ்டியன் தார்சிஸ்**, செஞ்சை



## இது சாத்தியமா ?

- வாழ்வின் அன்றாட சூழல்களில் நாம் எதற்கு அடிபணிகிறோம்? சீடத்துவத்திற்கா? அல்லது மூடத்துவத்திற்கா? சீடத்துவத்திற்கு அடிபணியும்போது விண்ணகத்தில் மகிழ்ச்சி உண்டாகும் என்பதை மறவாமல் நல்ல சீடருக்குரிய குணநலன்களை கடைபிடிக்கும்போது (2 திமோ 2: 24-25).
- யாரிடமெல்லாம் அனுப்பப்படுகிறோமோ அவர்களிடம் சென்று கடவுள் விரும்புவதை மட்டும் சொல்லும்போது (எரே. 1:7).
- அஞ்சாது தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது (திப 18: 9).
- இறந்தோரைப் பற்றி கவலைப்படாமல் இறையாட்சி பற்றி அறிவிக்கும்போது (லூக் 9:60)
- சீடத்துவத்தில் நிலைத்திருப்பது என்பது சாத்தியமே.

நற்பணி **அருள் இளங்கோ,** இராம்நகர்

# எதிர்பார்ப்பா ? எதிர்நோக்கா ?
## (யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)

கல்யாண மாலையில் முகுந்தன் அவர்களை அறிமுகப்படுத்த அவரின் அம்மா வந்திருக்கிறார்கள். சொல்லுங்கம்மா ! உங்களுக்கு எப்படிப்பட்ட மருமகளை நீங்க எதிர்பார்க்கிறீங்க?

என் மகன் IT - யில் work பண்ணுகிறான். 2 லட்சம் சம்பளம். வருகின்ற மருமகள் என்னையும் என் மகனையும் அன்போட பார்த்து கொள்பவளா. சிக்கனமா செலவு செய்பவளா இருக்கனும்.

சொல்லுங்க முகுந்தன் நீங்க எப்படிப்பட்ட மணப்பெண் உங்களுக்கு அமையனும்னு எதிர்பார்க்கிறீங்க?

வேலைக்கு போகிறவளாக இருக்கனும் நல்ல நிறமா அழகா இருக்கனும். அன்பா இருக்கனும். குடும்பத்தை Care எடுத்து பார்த்துக் கொள்ளனும்.

முகுந்தன் நீங்க நெனச்ச மாதிரி எதிர்பார்க்கிற மாதிரி சிறந்த நல்ல மணமகள் உங்களுக்குக் கிடைப்பாள். அதற்கு இந்த நிகழ்ச்சி வழியாக வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். (நன்றி: கல்யாணமாலை)

பெண் நல்லவளாய் அழகானவளாய். அன்பானவளாய் இருக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. இன்பத்திலும் துன்பத்திலும் உடல் நலத்திலும் பிரமாணிக்கமாய் கடவுளுக்கு உகந்த வகையில் வாழ்ந்து விண்ணக வீட்டிற்கு போய் சேர வேண்டும் என்பதே எதிர்நோக்கு.

'எதிர்நோக்கின் திருப்பயணிகளாய்' என்ற மைய சிந்தனையில் யூபிலி ஆண்டு சிறப்பிக்கப்பட வேண்டும் என்று நம் திருத்தந்தை அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

ஒரு கிரவுண்டில் மாடர்னாக வீடு கட்டனும். பிள்ளைகளை சிறப்பாக படிக்க வைத்து வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும். தொழிலில் எடுக்கும் முயற்சிகளெல்லாம் வெற்றியை அளிக்க வேண்டும். எப்போதுமே ஆரோக்கியமாக. அன்பான சூழலில் மகிழ்வாக இருக்க வேண்டும் ... இதெல்லாம் நமது உலக இயல்பில் உதிக்கும் எதிர்பார்பார்ப்புகள். பல நேரங்களில் இவை நாம் எதிர்பார்த்தபடி நடந்திருக்கலாம். கடவுள் நம் வாழ்வில் செய்திருக்கும் நன்மைகள். செல்வங்கள் இவற்றில் மட்டுமே நம்மனம் தேங்கி விடக் கூடாது. அவற்றில் ஊடுருவியிருக்கும் இறையருளை நினைத்து நன்றியுணர்வுடன் வாழ்வதும். இல்லாதோருடன் இருப்பதைப் பகிர்ந்து வாழ்வதும். இந்த உலகம் நிரந்தரமல்ல. இங்கே நாம் தற்கால குடிகள் விண்ணகப் பயணிகள் என்பதைப் புரிந்து வாழ்ந்து விண்வாழ்வுக்காக நம்மைத் தயாரிக்க வேண்டுமென்பதே எதிர்நோக்கு.

எதிர்பார்ப்புகள் எதிர்நோக்குக்கு கொண்டு சென்ற நிகழ்வுகளை விவிலிய ஒளியினில் தியானிப்போம்.

**எதிர்பார்ப்புகளின் மாற்றம் :**

நூற்றுவர் தலைவர் இயேசுவிடம் தன் மகனுக்காக அவனின் உடல்நலத்திற்காக வந்தது அவரின் எதிர்பார்ப்பு. இயேசுவே அவரின் வீட்டிற்கு வருகிறேன் என்ற போது அவரின் வார்த்தைகளில் தொனித்த நம்பிக்கையின் அடர்த்தியை பார்ப்போம். 'ஐயா. நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன்.

ஒரு வார்த்தை மட்டும் சொல்லும். என் பையன் நலமடைவான்' (மத் 8:8) இந்த வார்த்தைகள் எதிர்பார்ப்பின் தரத்தை உயர்த்தியது. இயேசுவே விண்ணரசின் பந்தியில் அமரத் தகுதியுடையவர் அவர் என்று தம்மை பின்தொடர்ந்தவர்களிடம் கூறுகிறார். 'கடவுளின் அருள்செயலால் நம்பிக்கை வாக்குறுதியின் அடிப்படையாயிற்று' (உரோ 4:16).

புதிய ஏற்பாட்டு நூலில் இயேசுவை நாடி வந்து அசையா நம்பிக்கை தந்த எதிர்பார்ப்பினால் உடல் நலத்தைப் பெற்ற ஒவ்வொருவரும் அவற்றிலே நின்று போய்விடவில்லை. இயேசுவிடம் பாவமன்னிப்பும், பாராட்டும் பெற்று அடுத்த நிலைக்கு கடந்து வருவதைப் பார்க்கலாம். பலருக்கும் விண்வீட்டின் பத்திரத்தை இங்கேயே இயேசு பதிந்து தருகிறார். இதை இதைத்தானே எதிர்பார்த்தேன் இதுதானே என் தந்தையின் எதிர்பார்ப்பும் என்று மகிழ்ந்து தன்னுடன் இருந்த சீடர்களுடனும் மக்கள் கூட்டத்தினரிடமும் தமது மகிழ்வை பகிர்ந்து கொள்கிறார். இதுதான் தந்தையின் எதிர்நோக்காக இருந்தது. 'என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் அழியவிடாமல்... இதுவே என்னை அனுப்பியவரின் திருவுளம்' (யோவா 6:39) என்றாரே நம் இயேசு.

அந்த கால் ஊனமுற்ற பிச்சைக்காரர் பேதுருவையும், யோவானையும் 'எதாவது கிடைக்கும் ' என்ற எதிர்பார்ப்புடன் ஆவலாய் பார்த்தார். பிச்சை கிடைக்கும் என்று எதர்பார்த்தவருக்கு எதிர்பாராமல் கிடைத்ததோ உடல் நலம். கால்கள் வலுவடைய துள்ளி குதித்தெழுந்தவர் வீட்டிற்குச் செல்லவில்லை. கடவுளைப் போற்றிப் புகழ்ந்து கொண்டு சீடர்களோடு கோவிலுக்குள் சென்றார். இதற்குப் பின் அவரின் எதிர்பார்ப்பு விண்ணை நோக்கிய எதிர்நோக்காக மாறியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இது போலவே இயேசுவைப் பார்த்தால் போதும் என்ற எதிர்பார்ப்போடு காத்திருந்த சகேயு இயேசு தன் வீட்டில் தங்கிய போது அவருக்கு முன்னால் இவ்வுலக செல்வம் ஒன்றுமில்லை என்பதை அறிந்து கொண்டார். அவரின் எதிர்பார்ப்பு எதிர்நோக்காக மாறியது. பாவ அறிக்கை செய்து அதற்குப் பரிகாரம் செய்து இயேசு அளித்த மீட்பின் மகிழ்வைப் பெற்றுக் கொண்டார்.

'அசையாத அடித்தளமுள்ள ஒரு நகரை எதிர்நோக்கியிருந்த' (எபி 11:10) நம்பிக்கையின் தந்தை அபிரகாமை போல இறையனுபவம் பெற்ற அனைவரும் இவ்வுலகில் இறையாட்சி என்ற இறை கனவை நிறைவேற்ற தங்கள் வாழ்வை மேன்மைப்படுத்திக் கொண்டனர்.

'நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றியவர்களாயிற்றே எங்களுக்கு என்ன கிடைக்கும்? ' உலகியல் சார்ந்த பேதுருவின் இந்த எதிர்பார்ப்புக் கேள்விக்கு இயேசு விண்ணக பேரின்பத்தை விவரித்து அங்கு அவர்களுக்கு கிடைக்கப் போகும் மகிமை பற்றி விளக்குகிறார். அன்றைய நிலையில் அவர் அதை முழுமையாக புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

அதற்கு பிறகும் யாக்கோபு, யோவானின் தாய் 'நீர் ஆட்சி புரியும் போது.... அமரச் செய்யும்' (மத் 20:21) என்று கேட்ட போது மற்ற பத்து சீடர்களும் கோபங்கொண்டதைப் பார்க்கிறோம்.

இயேசுவின் இறப்பு ,உயிர்ப்பு அனுபவங்களும், பெந்தகோஸ்து அனுபவமும் அவர்களின் உலக எதிர்பார்ப்பை நீர்த்துப் போக செய்தது. மனத் தெளிவையும்

ஆன்ம தூய்மையும் தந்து ஆற்ற வேண்டிய இறையாட்சிப் பணிகளும் உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டிய மீட்பும் அதற்காக முன்னெடுக்க வேண்டிய முயற்சிகளையும் வரையறுத்துப் பார்த்து மீட்பின் பணியை ஆற்றலோடு செய்ய ஆரம்பித்தனர்.

எதிர்பார்ப்புகளின் தரம் உயர்ந்தால் எதிர்நோக்கும் தரம் வாய்ந்ததாய் அமையும். உயர்வானங்களைக் கடந்து அது இறை அரியணை முன் நிறை மகிழ்வில் என்றென்றும் வாழும் நிலை வாழ்வில் நம்மை நிறுத்தி வைக்கும்.

**கடவுளின் எதிர்நோக்கு:**

'தம் ஒரே மகனிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்புகூர்ந்தார் ' (யோவா 3: 16) இறைஅன்பின் எதிர்நோக்கானது அனைவரையும் ஒருசேர விண்ணக ஏதேனில் மீண்டும் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்பதே ஆகும்.

'என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையை செய்து முடிப்பதுமே என் உணவு' (யோவா 4:34) தந்தையின் எதிர்நோக்கும் மகனின் எதிர்நோக்கும் கைகோர்த்து மீட்பின் பாதைக்கு வழி வகுத்தது. தூய ஆவியாரின் தூண்டுதலாலும் ஆற்றலாலும் இப்பணி சீடர்கள், அவர்வழி வந்த புனித மக்கள் வழியாக இன்று இந்த உன்னதப் பணி நம்மிடம் அளிக்கப்பட்டுள்ளது.

**நமது எதிர்நோக்கு:**

'தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். அவர் இறைமக்களுக்கான ஒளிமயமான உரிமைப் பேற்றில் பங்கு பெற (நம்மை) உங்களைத் தகுதியுள்ளவர்களாக்கியுள்ளார்' (கொலோ 1: 12) என்ற தூய பவுலடியாரின் வார்த்தை நமக்கு ஊக்கமூட்டுகிறது.

'மறைநூல் தரும் மன உறுதியினாலும் ஊக்கத்தினாலும் நமக்கு எதிர்நோக்கு உண்டாகிறது' (உரோ 15:4) மறைநூலை படித்து தியானித்து நம் எதிர்நோக்கை வான் நோக்கி இறைவனை நோக்கி உயர்த்துவோம்.

நாம் மட்டுமல்ல அனைத்து மக்களையும் விண்ணக மாட்சிக்கு அழைத்துச் செல்ல குன்றா எதிர்நோக்குடன் உழைப்பது அவசியம். அவரிடம் அடைக்கலம் தேடும் நாம், நம் கண்முன் எதிர்நோக்கியுள்ளதை விடாமல் பற்றிக் கொள்வதற்குத் தளரா ஊக்கம் கொண்டிருக்க வேண்டும். இந்த எதிர்நோக்கே நம் உள்ளத்திற்குப் பாதுகாப்பான, உறுதியான நங்கூரம் போன்றது' (எபி 6: 18, 19) இந்த வார்த்தைகள் நம்மை திடப்படுத்துகிறது.

கடவுளின் அருளும் இரக்கமும் எல்லா இடங்களிலும் அறிவிக்கப்பட வேண்டும். கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்து (விடுதலை) நிகழ்காலத்தில் நின்று கொண்டு எதிர்காலத்தில் முன்னேற நம்பிக்கையின் திருப்பயணிகளாக பயணிப்போம். பிறர் பயணிக்க கரம் கொடுப்போம்.

'எதிர்நோக்கைத் தரும் கடவுள் நம்பிக்கையால் உண்டாகும் பெருமகிழ்ச்சியாலும், அமைதியாலும் நம்மை நிரப்புவராக. தூய ஆவியாரின் வல்லமையால் நாம் இன்னும் மிகுதியான எதிர்நோக்குடன் வாழ அருள்புரிவாராக ' (உரோ 15:13)

நற்பணி **ஜெஸி. P.**

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 01 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 04 | பரிந்துரை செபம் | திருஇருதய ஆண்டவர் திருத்தலம் இடைக்காட்டூர் |
| 05 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், பரமக்குடி<br><br>காளையார்கோவில் |
| 05. | வட்டாரத் தியானக் கூட்டம் | ஆவுடைபொய்கை, புளியால், சருகணி தேவகோட்டை |
| 11. | புதிய பணியாளர்கள் பயிற்சி | குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம்<br>வியான்னி அருள்பணி மையம், சிவகங்கை. |
| 12. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில் இராமநாதபுரம்.<br>புனித அருளான்ந்தர் திருத்தலம், ஓரியூர். |
| 12 | தொடர் களப்பணி | சாயல்குடி பங்கு மேல முந்தல் |
| 11-18 | அம்புரோஸ் அறநெறி அமைப்பு நிதி திரட்டல் | அனைத்து வட்டாரங்கள் |
| 18. | வட்டாரத் தியானக் கூட்டம் | இராமஸ்வரம், தங்கச்சிமடம், பாம்பன் |
| 19. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமலஅன்னை அமைதியகம், காயாவயல்.<br>புனித ஆரோக்கிய அன்னை கோவில் சாயல்குடி |
| 19. | வட்டாரத் தியானக் கூட்டம் | இடைக்காட்டூர், மானாமதுரை, இராஜசிங்கமங்கலம் |
| 21. | புதிய பணியாளர்கள் பயிற்சி | தூய ஆவியார் கோவில், இராஜசிங்கமங்கலம் |
| 26 | தொடர் களப்பணி | அஞ்சுக்கோட்டை, இருதயபுரம் பங்குகள் |
| 26. | வட்டாரத் தியானக் கூட்டம் | சாயல்குடி |

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

| | |
|---|---|
| இதோ! நெருப்புத் தேரும் நெருப்புக் குதிரைகளும் திடீரென நடுவே வந்து அவர்களைப் பிரித்தன. எலியா சுழற்காற்றில் விண்ணகத்துக்குச் சென்றார். | **2 அரசர்கள் 2:11** |

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 05.01.25 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி GMS. ராணி<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி A. அடைக்கலம் |
| 05.01.25 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி S. மோட்சஅலங்காரம்<br>நற்பணி V. செங்கோல்மேரி<br>நற்பணி P. சகாயராணி |
| 11.01.25 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி X. லூர்துமேரி<br>நற்பணி J. ரபேக்கா |
| 12.01.25 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி பெ.தெரசா மிரண்டா |
| 12.01.25 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி A. யூஜின் அமல்ராஜ்<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் |
| 12.01.25 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி A. சகாயராஜா<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 19.01.25 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. பச்சைஜோதி<br>நற்பணி S. சகாயராணி<br>நற்பணி P.அமலோற்பவஆரோக்கியராணி |
| 19.01.25 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள்மரிய நாயகம்<br>நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி A. சந்திர புஷ்பா |
| 26.01.25 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி S. தைனஸ்மேரி |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**
-எல்லாரோ

எத்தனை **வீடு வைத்திருக்கிறோம்** என்பது முக்கியமல்ல,

எத்தனை முறை **விட்டுக் கொடுத்திருக்கிறோம்** என்பதுதான் முக்கியம்.

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

ஆண்டவரிடம் அச்சம்கொள்ளுதல் ஞானத்தைத் தரும் பயிற்சி: மேன்மை அடையத் தாழ்மையே வழி. நீமொ 15:33

'அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் காலில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள்' (எபே6:15)

முன் தயாரிப்புடன் செய்யும் செயல்தான் முழு வெற்றியைத் தரும் என்று தொடர்ந்து தியானித்து வருகிறோம். ஆயத்த நிலை என்பது நற்செய்தி அறிவிப்புப் பணியின் அடித்தளம்.

இயேசுஆண்டவர் இவ்வுலகில் வாழ்ந்த போது நன்றியுணர்வு மிக்கவராக இருந்தார். தந்தையிடம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றி செலுத்துகிறவராகவும், எதையும் பெறுவதற்கு முன்பாகவே நம்பிக்கையோடு நன்றி கூறுகிறவராகவும் இருந்தார் என்பதை நாம் விவிலியத்தில் பல இடங்களில் வாசிக்கின்றோம். 'இயேசு ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்கு பகிர்ந்து கொடுத்த போது' அப்பங்களை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்கு கொடுத்தார். அவ்வாறே மீன்களையும் பகிர்ந்தளித்தார்'(யோவா 6:11). ஏழு அப்பங்களை பகிர்ந்தளித்த போது 'ஏழு அப்பங்களையும் மீன்களையும் எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி, பிட்டு சீடர்களிடம் கொடுக்க அவர்களும் மக்களுக்குக் கொடுத்தார்கள்' (மத் 15:36). இயேசு அப்பங்களைப் பகிர்ந்த இரண்டு நிகழ்விலும் தந்தையாம் கடவுளுக்கு நன்றி கூறிய பின்தான் பரிமா வ்மாறு சொன்னார் என்பதை நான்கு நற்செய்திகளிலும் வாசிக்கின்றோம். அதேபோல லாசரை உயிரோடு எழுப்பிய நிகழ்விலும்'அவர்கள் கல்லை அகற்றினார்கள் இயேசு அண்ணாந்து பார்த்து தந்தையே நீர் என் வேண்டுதலுக்கு ச் செவி சாய்த்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன்'.(யோவா11:41). என்றார். இலாசரை உயிரோடு எழுப்புவதற்கு முன்பே தந்தைக்கு நன்றி கூறிய பின் தான் இலாசரே வெளியே வா என்று அழைக்கிறார்.

நன்றி உணர்வு என்பது நிறைவின் உணர்வு என்கிறார்கள். யாரெல்லாம் வாழ்க்கையை நிறைவானதாக வாழ்கிறார்களோ அவர்களின் உணர்வோடு கலந்ததுதான் நன்றி. விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள் (மத்5:48) என்று நிறைவான வாழ்வு வாழ்வதற்கு நம் ஆண்டவர் கற்றுத் தந்திருக்கிறார். வாழ்க்கையில் எதிலுமே நிறைவை அனுபவிக்காதவர்களால் நன்றி சொல்லவே முடியாது. பத்து தொழு நோயாளர்களை ஆண்டவர் குணப்படுத்திய போது அன்னியர் ஒருவர் மட்டுமே திரும்பி வந்து நன்றி கூறி இயேசுவின் பாராட்டைப் பெறுகிறார் (லூக் 17:11-19).

'நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் எல்லாவற்றிற்காகவும் எப்போதும் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்' (எபே5:20) என்று புனித பவுல் கூறுவது போல நாம் வாழும் வாழ்க்கையே கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்டதுதான் எனவே நம் வாழ்வில் நடக்கிற அனைத்துக்காகவும் எப்போதும் நன்றி செலுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். இஸ்லாமிய சகோதரர்கள் பாடும் பாடல் வரி ஒன்று நினைவுக்கு வருகிறது. ..'கொடுத்ததற்கே நன்றி சொல்லி முடியவில்லை இன்னும், கேட்பதற்கு அஞ்சுதே மனம்' என்று அந்த பாடல் வரிகள்

தொடரும். இவ்வாறு நன்றியின் மகத்துவத்தை அந்தப் பாடல் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

'தொடர்ந்து இறைவனிடம் வேண்டுங்கள் விழிப்போடும் நன்றி உணர்வோடும் அதில் ஈடுபடுங்கள்' (கொலே4:2) என்ற வார்த்தை நாம் செபத்தில் நிலைத்திருப்பவர்களாய் தந்தையோடு நமக்குள்ள உறவில் விழிப்புணர்வு உள்ளவர்களாயும் நன்றி உணர்வு உள்ளவர்களாயும் இருக்க வேண்டும் என்று கற்றுத் தருகிறது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு என்று திருவள்ளுவர் பாடியிருக்கிறார். எந்த அறத்தை மறந்தவர்க்கும் வாழ்வு உண்டு. ஆனால், ஒருவர் செய்த நன்மையை மறந்தவர்க்கு வாழ்வில்லை என்பது இதன் பொருள். எனவே நன்றி உணர்வு இல்லாதவர்க்கு நிலை வாழ்வு இல்லை என்பதை புரிந்து கொள்ளலாம்..

'எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள் உங்களுக்காக் கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே' (1தெச5:18). எல்லா சூழ்நிலையிலும் நன்றி கூறுகின்ற மனநிலையை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். நன்மையிலும் தீமையிலும், வளர்ச்சியிலும் தளர்ச்சியிலும், வெற்றியிலும் தோல்வியிலும், இன்பத்திலும், துன்பத்திலும் இப்படி எல்லா சூழலிலும் நன்றி கூறுகின்றவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதே கடவுளின் திருவுளம்.

மக்களுக்கு நன்றி செலுத்தாதோர் கடவுளுக்கு நன்றி செலுத்துவதில்லை என்று நபிகள் நாயகம் கூறியிருக்கின்றார். கடவுள் நமக்குக் காட்சி கொடுத்து நேராக வந்து எந்த நன்மையும் செய்வதில்லை. மனிதர்கள் வழியாகத்தான் நமக்கு நன்மைகளைச் செய்கின்றார். நன்மைகளை பிறரிடம் இருந்து பெற்றுக் கொண்ட நாம் பல நேரங்களில் என்ன பெருசா செய்துட்டாங்க என்று கூறி நன்றி கூறுவதற்கு பதிலாக பட்டென்று சொல்லி நன்மை செய்தவர்களையே காயப்படுத்தி விட்டு ஒன்றும் நடக்காதது போல் கடந்து போய் விடுகின்றோம். இந்த நிலையை பணியாளர்களாகிய நாம் மாற்றிக்கொள்ள வேண்டும். நன்றி கூறுவது இயேசு ஆண்டவரின் நற்பண்புகளில் ஒன்று என்பதால் நாமும் அதை அணிந்து கொள்ள வேண்டும்.

'உள்ளவருக்கு கொடுக்கப்படும் அவர் நிறைவாகப் பெறுவார். மாறாக, இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்' (மத்13:12). யாருக்கு நன்றி உணர்வு உள்ளதோ அவருக்கு எல்லாமே கொடுக்கப்படும் அவரும் நிறைவாகப் பெற்றுக் கொள்வார். ஆனால், நன்றியுணர்வு இல்லாதவரிடம் இருந்து அவரிடம் உள்ளதும் எடுக்கப்பட்டு வெறுமையாக்கப்படுவார். எனவே நன்றியுணர்வு மிக்கவர்களாயிருந்து நற்செய்தி அறிவிக்க ஆயத்தமாவோம். புனித திருமுழுக்கு யோவான் ஆண்டவருக்கு ஏற்புடைய ஒரு மக்களினத்தை ஆயத்தம் செய்தார். (லூக்1:17) அதுபோல நாமும் ஆண்டவருக்கு ஏற்புடைய ஒரு மக்களினத்தை ஆயத்தம் செய்ய ஆயத்தமாவோம்.

இப்புதிய ஆண்டு நம் ஆன்மாவை வளமையும் செழுமையுமாய் மாற்றும் ஆண்டாக இருக்க அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.



1816 ஆண்டில் ஒருநாள் தூய வின்சென்ட் பல்லோட்டி ரோம் நகரில் உள்ள ஒரு வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்போது அவரைவிட இரண்டு அல்லது மூன்று வயது மூத்த ஜியமரியா என்னும் மனிதரைச் சந்தித்தார். அவர் பார்ப்பதற்கு ஒரு பணக்கார மனிதரைப் போன்று தோன்றினாலும், மிகவும் சோர்வுற்றுக் காணப்பட்டார்.

உடனே பல்லோட்டி அவரிடம், 'உங்களைப் பார்ப்பதற்கு பணக்காரர் போன்று தெரிகிறீர்கள். ஆனால் மிகவும் சோகமாக இருக்கிறீர்களே. என்ன காரணம்? என்று கேட்டார். அதற்கு அவர், 'நான் சுவிஸ் இராணுவத்தில் இராணுவ வீரசாகச் சேர்ந்து, திருத்தந்தை அவர்களை பாதுகாக்கும் பணியைப் பெறலாம் என நினைத்தேன். ஆனால் எனது கண்பார்வை சிறுது மங்கலாய் போனதால் அது இயலாமல் போய்விட்டது' என்று மிகவும் வருத்தத்தோடு கூறினார். அதற்கு பல்லோட்டி, 'சகோதரரே வருத்தப்படாதீர். ஒருநாள் வரும். அப்போது நீர் திருந்தந்தையைப் பாதுகாத்துக் கொண்டிருக்கமாட்டீர். மாறாக திருத்தந்தையாக நீர் இருப்பீர். அப்போது சுவிஸ் இராணுவ வீரர்கள் உம்மைப் பாதுகாத்துக் கொண்டிருப்பார்கள்' என்றார். இவ்வாறு சொல்லிவிட்டு பல்லோட்டி அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றார்.

இது நடந்து முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1846 ஆம் ஆண்டு, ஜியமரியா என்ற அந்த மனிதர் ஒன்பதாம் பத்திநாதர் என்னும் பெயரில் திருத்தந்தையாக உயர்ந்தார்.

புனித வின்செண்ட் பல்லோட்டி 1795 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் நாள், ரோம் நகரில் உள்ள ஒரு செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்தார். பல்லோட்டி சிறுவயது முதற்கொண்டே ஏழை எளியவர்மீது அதிக அன்பும் அக்கறையும் கொண்டு வாழ்ந்து வந்தார்.

இவர் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்ட பிறகு குருமடங்களில் இறையியலைக் கற்பித்து வந்தார். ஆனால் அது தன்னுடைய பணி இதுவல்ல என உணர்ந்து ஒரு பங்குத் தந்தையாக இருந்து பங்குப் பணியை செய்யத் தொடங்கினார்.

பங்குத்தந்தையாக மாறிய பிறகு நிறைய நேரத்தை ஒப்புரவு அருளடையாளம் கேட்பதற்கும் நோயாளிகள், வயது முதிர்ந்தோர் மற்றும் சிறைவாசிகளைச் சந்தித்து ஆறுதல் சொல்வதற்கும் பயன்படுத்தினார். தன்னிடம் உள்ளதையெல்லாம் வாரி வழங்கினார்.

இவர் அருள் பணியாளர்களுக்கும் அருள்சகோதரிகளுக்கும் என்று இரண்டு துறவறை சபையினை உருவாக்கினார். இவர் ஆற்றிய பணிகளைப் பார்த்த திருத்தந்தைகள் பதிமூன்றாம் லியோ மற்றும் ஒன்பதாம் பத்திநாதர் கிறிஸ்தவ நற்செயல்களின் முன்னோடி' என்று அழைத்தனர்.

இப்படி இறைப்பணியும், மக்கள் பணியும் தன்னுடைய இரண்டு கண்கள் என்று கருதி வாழ்ந்த வின்செண்ட் பல்லோட்டி 1850 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் நாள், தன்னுடைய இன்னுயிரைத் துறந்தார். 1963 ஆண்டு ஆண்டு இவர் புனிதராக உயர்த்தப்பட்டார்.

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்

கடந்த நாட்களில் மனிதனை இயக்கும் மாய விசையான "தள்ளு" என்ற பண்பில் வளர அதாவது உள் உந்துதவில் (self motivation) 10 வழிமுறைகளில் 9 வழிமுறைகளை பார்த்தோம். இம்மாதத்தில் நேர்மறை மனிதர்களாக இருப்பது பற்றி பார்போம். கீழ்கண்ட தலைப்புகளில் கடந்த நாட்களில் சிந்தித்தோம்




1. என் வாழ்வின் நோக்கம்
2. என் நோக்கத்தின் காரணம்.
3. நீண்ட. குறுகிய கால இலக்குகள்
4. காட்சி பலகை.
5 நேர்மறையான உறுதி மொழி
6. காட்சி பலகையின் கற்பனை பயிற்சி.
7. அனுதின அனுபவ ஏடு.
8. ஓய்வு... ஓயாமல் ஒளிர்விட
9. நேர்மறை சுற்றம்.
10. நேர்மறை மனிதர்களாக. (இப்பகுதியில் பார்ப்போம்)

சில நூற்றாண்டுகளேக்கு முன்னர் ஜப்பான் நாட்டில் ஒரு உள்ள சிறிய ஆட்சிப்பகுதியில் ஒரு பழக்கம் இருந்தது. 16 ஆண்டுகளுக்கு ஒரு முறை சிறந்த படைவீரனை தேர்ந்தெடுத்து அவனுக்கு 'சாமுராய்' என்ற பட்டம் வழங்கப்படும். ஒருமுறை இரண்டு சரிசமமான திறன் கொண்ட இரண்டு படை வீரர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஆனால் ஒருத்தர் மட்டும் தான் தேர்வு செய்யபட வேண்டும். அந்த இருவர் கென்சி (Kenji). கேய்டோ (Kaito) ஆவர். இதில் யாருக்கு "சாமுராய்" பட்டம் தரபட வேண்டும் என்ற இறுதி தீர்ப்பை அரசர்தான் பரிசோதனை செய்து முடிவு செய்ய வேண்டும் என அந்த நாட்டின் தேர்வு குழு பரிந்துரை செய்தது.
இந்த கடைசி பரிசோதணையை அந்த தேர்வு குழுமுன் அரசர் பரிசோதனை செய்ய வேண்டும். அந்த பரிசோதனையில் யார் வெற்றி பெருகிறார்களோ அவர்களே சாமராய்' என்ற பட்டத்தை பெற தகுதியானவர் என கருதபடுவர். அந்த இருவரில் கேய்டோ என்ற படைவீரரின் தாத்தா டாரோ சுவிக்கி (Taro Suzuki) அரசரை சிறுவதில் இருந்து வார்த்துட பல பயிற்சிகளை கொடுத்த ஆசான். எனவே கேய்டோவிற்கு "சாமுராய்" பட்டத்தை தர முடிவு செய்தார். அதே வேளையில் இரண்டு பேருக்கும். ஒரே மாதிரியான பரிசோதனை ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால் அரசனின் முடிவில் அந்த தேர்வு குழு குற்றம் கண்டுபிடிக்க வாய்ப்பு உள்ளது. இரவு முழுவதும் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டார். மறுநாள் தனது குருவை தனியாக சென்று பார்த்து. தன் குழப்பத்தை சொன்னார். அதற்கு அவரின் குரு ஒரு அருமையான யோசனை சொன்னார். அதை கேட்ட மன்னருக்கு மகிழ்ச்சி அதிகமானது. குருவின் யோசனை படி மன்னர் மீது யாருக்கும் சந்தேகம் வராது. அதே வேளையில் அவர் நினைத்த கேய்டோ தான் சாமராய்' என்ற பட்டத்தை பெறுவான்.
மறுநாள் தனது அரண்மனை முற்றத்தில் தேர்வு குழுவை வர வைத்து. அவர்களை சற்று தூரத்தில் நிற்க வைத்து "இன்று எனது பரிசோதனையை தொடங்க போகிறேன் எனவே கென்சி யை வர சொல்லுங்கள்' என்றார். அப்போது அந்த குழுவைப் பார்த்து 'இன்று கென்ஜிக்கான சோதனை. நாளைக்கு கேய்டோவிற்கான சோதனை. இரண்டு பேருக்கும் ஒரே வகையான சோதனைதான் ஆனால் இது ஒருவருக்கொருவர் அடுத்தவருக்கு என்ன சோதனை என தெரியாது எனச் சொன்னார். கென்ஜி மன்னரிடம் வந்தார். மன்னரும். கென்சியும் பேசுவது தெரியும் ஆனால் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது அந்த தேர்வு குழுவிற்கு கேட்காது. மன்னர் அவனிடம் தனது நாட்டிற்கு வெளியே உள்ள அடர்ந்த காட்டைப் பற்றியும். அதில் உள்ள கொடிய

விஷ பாம்புகள் பற்றியும், கொடிய விலங்குகளை பற்றியும், இதுவரை அந்த காட்டிற்குள் சென்று இறந்தவர்களை பற்றியும் அதிக நேரம் பேசிவிட்டு கடைசியாக தனக்கு அருகில் இருந்த குதிரை வண்டியை கொடுத்து அதை எடுத்துக் கொண்டு காட்டிற்குள் போக கட்டளையிட்டார். அவனும் புறப்பட்டு சென்றான். இவை அனைத்தையும் அந்த தேர்வுகுழு கவனித்துக் கொண்டிருந்தது.

மறுநாள் காலையில் தேர்வு குழுவும் மன்னரும் அரசவையில் காத்துக்கொண்டிருக்க, அந்த காட்டின் மறு முனையில் இருந்த ஒரு படைவீரன் ஓடிவந்து அரசே! இன்று காலை ஒரு குதிரை வண்டி காட்டின் மறுமுனை வந்தது. அதில் வீரன் கொடிய விலங்குகளால் தாக்கப்பட்டு பிணமாகி கிடந்தான் எனச் சொன்னான். இதை கேட்ட அனைவரும், அதிர்ச்சியில் உறைந்தனர். அன்று மாலை அதே சோதனைக்கு அதே அரண்மனை முற்றத்திற்கு தேர்வு குழுவை வரவைத்தார். இப்போது போட்டியில் இருந்து ஒருவர் தான் உயிரோடு இருக்கிறார். எனவே கேய்டோவை வர வைத்தார். மன்னர் கேய்டோவிடம் பேசத் தொடங்கினார். அரண்மனையில் இருந்த அந்த குதிரைகளை பற்றியும், தேரைப் பற்றியும் அந்த தேரில் இருந்த எல்லா வகையான ஆயுதங்களை பற்றியும் அதிகமாக பேசினார். அந்த ஆயுதங்களால் எத்தனை கொடிய விலங்குகளை மன்னரும் அவரின் தந்தையும் கொன்று குவித்தனர் என்பதை பற்றியும் சொன்னார். அந்த குதிரைகளால் எத்தனை போரில் வென்றான்றார் என்பதை பற்றி தெளிவாக சொன்னார். இறுதியில் அந்த காட்டிற்குள் சென்று மறுமுனைக்கு வர சொல்லி அனுப்பிவிட்டார்.

மறுநாள் மன்னரும் தேர்வுகுழுவும் அரசவையில் காத்திருக்கையில், காட்டின் மறுமுறை படைவீரன் ஓடிவந்து "அரசே! நமது காட்டின் மறுமுனையில் ஒரு வீரன் குதிரை வண்டியில் காட்டு விலங்குகளை கொன்று அடுக்கி வைத்துள்ளான். அதிக பசியால் காட்டு விலங்குகளை தீயில் வாட்டி உண்டு கொண்டிருக்கிறான்". எனச் சொல்ல அது கேய்டோ தான் என தேர்வு குழு தெரிந்து கொண்டது. இப்போது மறுநாள் அனைவரின் முன்னிலையிலும் கேய்டோவிற்கு அனைவரின் அராவராத்தோடு 'சாமுராய் ' பட்டம் வழங்கபட்டது. அரசன் தான் விரும்பிய கேய்டோவை சாமுராய் பட்டத்திற்கு உரியவனாக்கியதை நினைத்து பெறுமிதம் கொண்டார்.

இந்த கதை ஒரு கற்பனையாக இருந்தாலும் இதில் ஒரு ஆழமான கருத்து புதைந்துள்ளது. ஒரே மாதிரியான திறன் கொண்ட வீரர்கள்: ஒரே மாதிரியான குதிரை வண்டி குதிரைகள், ஆயுதங்கள், ஒரே மாதிரியான காடு. ஆனால் ஒருவன் உயிரிழந்தான் ஒருவன் வெற்றியோடு வந்தான்.

நமது வாழ்விலும் கொடிய விலங்குகள் கொண்ட காடுகள் உள்ளன. அதே சமயம் வழிமைமிக்க குதிரைகளும், வளமிக்க தேரும், கூர்மையான ஆயுதங்களும் உள்ளன. நாம் எதில் கவனத்தை திருப்புகிறோம் என்பதை பொருத்தே நமது வெற்றி தோல்வி அமைகிறது.

பத்தாம் வகுப்பில் கணக்கு பாடத்தில் தோல்வி உற்ற ஒரு மாணவன் கணக்கு பாடம் படிப்பதில் உள்ள தனது இயலாமைபால் கவனம் வைத்து கவலைபடுவதால் தற்கொலை வரை சென்றுவிடுகிறான். அதே மாணவன் மற்ற நான்கு பாடத்தில் தான் பெற்ற மதிப்பெண்களில் கவனத்தை திருப்பி தனது திறனை உணர்ந்து, மறு தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று 11 ஆம் வகுப்பை தொடர்கிறான்.

இன்றைய கால கட்டங்களில் நேர்மறை மனிதர்களே வெற்றி மனிதர்களாக வளம் வருகின்றனர். எதிர்மறை நம்மை எளிதில் கவர்ந்தாலும் நேர்மறைதான் அனைத்தையும் கடந்து செல்லும் மனபக்குவத்தை கொடுக்கும். நமக்கு துன்பம் வரும் போது நமது பலத்தில், திறமையில், வாய்ப்பில், வளமையில் கவனம் வைத்தால், நாம் எளிதில் அதை கடந்துவிடுவோம்.

**அசைபோட அரைநிமிடம் :**

"நேர்மறையானவைகள் மீது கவனம் வைக்கும் போது நேர்மறை மனிதர்களாகிறோம்".

சகோ. **S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**

மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

## யூபிலி ஆண்டில் என்னை மன்னியும்

- எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள்; துன்பத்தில் தளரா மனத்துடன் இருங்கள் என்ற இறை அழைப்பை மறந்து துன்பங்களில் எதிர்நோக்கின்றி மனச்சோர்வுற்றும் மகிழ்ச்சியின்றியும் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (உரோ 12:12)
- வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள் என்ற ஆலோசனையை மறந்து அருகில் வாழும் வறியவர்களை கண்டு கொள்ளாமல் உதாசீனமாக வாழ்ந்ததை எண்ணி மனம் வருத்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (உரோ 12:13)
- உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ்நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுங்கள், என்ற அறிவுரையை புறந்தள்ளி செல்வம், சாதியம், அறிவு ஆகியவற்றால் உயர்வு மனப்பான்மை கொண்டு மற்றவர்களை தரக்குறைவாக நடத்தியதற்காக, பேசியதற்காக மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும்.

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம் மாத செபக் கருத்து**

- உலகில் வாழும் புலம்பெயர்ந்தவர்கள், அகதிகள், போர் மற்றும் மனித வன்முறைகளால் பாதிக்கப்பட்டோர் உரிமைகள் பெறவும், மதிக்கப்படவும்.
- யூபிலி 2025 ஆண்டு திரு அவையின் புதுப்பித்தலுக்கும் எழுச்சிக்கும் வழி வகுக்க
- உலகில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கிடைய அமைதி திரும்ப
- இந்தியாவின் சனநாயகமும் மதச்சார்பின்னை கோட்பாடுகளும் அமைப்புகளும் அரசியல் சாசன அடிப்படைப் பண்புகளும் பேணி பாதுகாக்கப்பட
- தமிழர் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தின் மாண்பினை அனைவரும் உணர்ந்து போற்றி பாதுகாக்க.
- கிறிஸ்தவ சபைகளிடையே ஒற்றுமை ஓங்கி இறையாட்சிக்கு சான்று பகரவும்.

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- யூபிலி ஆண்டு இறைவேண்டலை தினமும் செபித்தல்
- மாதம் முழுவதும் கனிவு என்ற இறைப்பண்பில் வளர்தல்



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை - அமைதியகம்



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை - அருள்சான்று மையம்



புதிய பணியாளர் பயிற்சி - காளையார் கோவில்


படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?


படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **சாலமோனின் ஞானம் 4-6 அதிகாரங்களுக்குள்**











தலைமைத்துவப் பயிற்சி - பூண்டி



கூட்டியக்க ஆன்மீகப் பயிற்சி - எம்மாயூஸ் மையம்



புதிய பணியாளர் பயிற்சி-ஆர்.எஸ் மங்கலம்



புதிய பணியாளர் பயிற்சி சயல்குடி

**Narseithi Paniyalar** (தனிச்சுற்றுக்கு மட்டும்)
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Vendhoni (B.P.O.)
Paramakudi - 623 701, Ramnad Dist. Tel : 04564- 230453.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com